[11th February 1958

Lower Bhavani Area.

* 38 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received the report of the Collector, Coimbatore, regarding the classification of lands and the rate of tax that should be levied thereon in the Lower Bhavani Area?

The Hon. Sri M. A. MANICKAVELU : Yes, Sir. Orders have since been issued for the reclassification of the lands into wet, garden and dry for the purpose of levying water cess.

Sri N. K. PALANISAMI : ஸார், இது விஷயமாக சர்க்கார் அறிக்கை கொடுத்திருப்பதில் தோட்டக்காலில் நெல் வைத்துக்கொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. எற்கெனவே இருக்கக்கூடிய திட்டப்படி தோட்டக் கால்களில் நெல் வைக்கலாம் என்று இருக்கிறது. இந்தப் புதுத் திட்டத்தை சர்க்கார் நீக்குவார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது இதையெல்லாம் உத்தியோகஸ்தர்கள் பரிசீலனை செய்து எது நஞ்சைப் பிராந்தியம், எது தோட்டக்கால், எது புஞ்சை என்று அங்கு போய் நிர்ணயிப்பார்கள். இது அமுலுக்கு வருவதற்கு ஆக்ட் ரூல்ஸ் எல்லாம் மாற்றப்படவேண்டும். மாற்றியதும்தான் இது அமுலுக்கு வரும்.

Sri N. K. PALANISAMI : எற்கெனவே தோட்டக்கால்களில் ஓரளவு, எதாவது கால் பங்கு அல்லது அரைப்பங்கு நெல் பயிரிடுவதற்கு அனுமதிக்கப்பட்டால் புதிய அறிக்கையில் அதற்குத் தடை போடப்பட்டிருக் கிறது. அதற்குப் பதிலாக தோட்டக்கால்களில் எப்போதும் போல் கால்பங்கு அல்லது அரைப்பங்கு நெல் போட அனுமதிப்பார்களா என்பதுதான் என் கேள்வி.

The Hon. Sri M. A. MANICKAVELU : அந்தந்தப் பிரதேசத்தில் எது நஞ்சை, எங்கு ஸீப்பேஜ் இருக்கிறது, இதையெல்லாம் பார்த்து உத்தி யோகஸ்தர்கள் பிரிப்பார்கள். எது நஞ்சை, எது புஞ்சை, எது தோட்டக்கால் என்றெல்லாம் இவர்கள் பிரிப்பார்கள்.

Sri P. G. MANICKAM : அப்படி நிலங்களை தரம் பிரிக்கும்பொழுது அதிகாரிகளோடு ஒத்துழைப்பதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : அப்படி உத்தேசம் இல்லை.

Political prisoners

* 39 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any proposal to release the political prisoners who have been sentenced to undergo imprisonment for life?

The Hon. Sri C. SUBRAMANIAM : The answer is in the negative.

Sri N. K PALANISAMI : அரசியல் கைதிகள் 30 வருஷம், 20 வருஷ தண்டனை கொடுக்கப்பட்டு இன்றையதினம் ஜெயிலில் இருக்கிறார்கள். பல பேர்கள் கொடுமையான நோயால் கஷ்டப்படுகிறார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய மாறுபட்ட அரசியல் கருத்துக்களையும், அரசியல் நிலையையும் ஒட்டி, அவர்களுக்கு பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்வதற்கு எதாவது எற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆயுள் தண்டனை அனு பவிப்பவர்கள் கொலை குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டவர்கள். ஆனால் அவர் கள் ஒவ்வொருவரும் அவரைப் பற்றி தகுந்த காரணங்கள் எதாவது காட்டி விடுதலை செய்யவேண்டுமென்று கேட்பார்களேயானால், அதை பரிசீலனை